

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 23.04.2026 | மனுஷரல்ல, தேவனுக்கே பிரியமாய் வாழுங்கள்! | 17வது வாரம் |
|---|---|---|



மனிதர்கள் புகழும் எவ்வித புகழ்ச்சியும், உங்களை தேவனுக்குப் பிரியமாய் மாற்றிட இயலாது! அதே போல, உங்களை துன்மார்க்கமாய் புறங்கூறும் நாவுகள், ‘‘தேவன் தன் ஜனத்தின் மீது வைத்திருக்கும் நல்ல சாட்சியாகிய அவரது மனநிலையை எவ்விதத்திலும் மாற்றிட இயலாது!’’ நாம் நின்றாலும் அல்லது வீழ்ந்தாலும் தேவன், நம் ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருக்கிறார்! நம் ஆண்டவருடைய பூரண அறிவின்படியே சகலமும் நடக்கிறது என்பதை அவர் பக்தர்கள் யாவரும் நன்றாய் அறிந்திருப்பார்கள்.

இங்கு மீண்டும் நாம் வலியுறுத்திக் கூறுவதெல்லாம் ‘‘ஓ கர்த்தாவே, என்னுடைய சமாதானம் மனுஷருடைய நாவுகளைச் சார்ந்திராதிருக்க கிருபை செய்தருளும்! என்னை புறங்கூறுவோரின் தொந்தரவு பல தோன்றினாலும்.... நானோ பயணத்தின் முடிவை அடைந்து, உம்மால் அங்கீகரிக்கப்பட்ட மெய் சீஷனாகவோ அல்லது உத்தம ஊழியனாகவோ நிலைநின்றிட கிருபை செய்தருளும்!’’ என A.W.டோசர் ஏறெடுக்கும் ஜெபம், உங்கள் ஜெபமாயும் மாறட்டும்!!

- ரத்னம்